# மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை

(1987 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க சட்டத்தினால் கூட்டிணைப்புச் செய்யப்பட்டது)

## பதவி வெற்றிடம்

மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி முகாமை சபை அலுவலகத்தில் பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை பூர்த்தி செய்வதற்காக கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைக் கொண்ட இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(1) **பொருள்பெறுகை அலுவலர் - வகுப்பு 11 –JM 1-1 (வெற்றிடம் 01)**

தகைமைகள்

**வெளிவாரியான விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகள் அ அல்லது ஆ)**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவல் அங்கீகரிக்கப்பட்ட விடயத்துறையில் ஒரு பட்டம்.

ஆ) பொருள்பெறுகை மற்றும் வழங்கல் விடயத்துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனத்தில் இருந்து இடைநிலை மட்டத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (பின்வரும் தகைமைகள் அ அல்லது ஆ)**

அ) மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு ஏற்புடைய தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆ) பதவிக்கு பொருத்தமான பாடத்துறையில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராதது (MA 1-2) தரம் II பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது**: 22 ஆண்டுகளுக்குக் குறையாமலும் 45 ஆண்டுகளுக்கு மிகாமலும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அதிகபட்ச வயது ஏற்புடையதாக மாட்டாது)

**சம்பள அளவுத்திட்டம்**: JM 1-1 - Rs. 72,650/= 10x1,360 – 18x2,040 – 122,970/=

அடிப்படை சம்பளம்: ரூ.58,615/- (2025)

(இந்த சம்பள அளவுத்திட்டம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் (DMS) சுற்றறிக்கை இல. 1/2025 இன் படி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இந்த அளவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்ப சம்பள படிநிலை 01.01.2027 முதல் அமுலுக்கு வரும். மேலே சொல்லப்பட்ட சம்பளத்துக்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்)

**பொது நிபந்தனைகள்**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரியும்

I. இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

II. பதவிக்கான கடமைகளைப் புரிவதற்கான உடல் ரீதியான மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருக்க வேண்டும்.

III. சிறந்த நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) சகல பதவிகளும் நிரந்தரமானதாகும் என்பதோடு ஓய்வூதியத்துக்கு உரித்தற்றதாகும்.

(இ) சகல விண்ணப்பதாரிகளும் ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுமாறு கோரப்படலாம்.

(ஈ) **ஊழியர் சேமலாப நிதியம்**: ஊழியர் சேமலாப நிதியத்துக்கு ஊழியரின் அடிப்படைச் சம்பளத்தின் 10% சதவீதம் பங்களிப்புச் செலுத்துகின்ற அதேநேரம் தொழில் தருனரினால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கு 12% சதவீதமும் ஊழியர் நம்பிக்கை நிதியத்துக்கு 3% சதவீதமும் பங்களிப்புச் செய்யப்படும்.

(உ) தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரி மருத்துவ/ திடீர் விபத்துக் காப்புறுதி திட்டத்துக்கும் உரித்துடையவராவார்.

(ஊ) **சான்றிதழ்கள்**: மேலே சொல்லப்பட்ட தகைமைகள் மற்றும் பதவியுடன் தொடர்புடைய அனுபவங்கள் தொடர்பிலான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். (அவ்வாறு சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை கவனத்தில் கொள்ளவும்.

மேலே குறிப்பிடப்பட்ட விபரங்களைக் உள்ளடங்கிய உறவினர் அல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் முகவரிகள் தொடர்பு இலக்கங்களையும் குறிப்பிட்ட முழுமையான சுயவிபரத்தை உள்ளடக்கிய விண்ணப்பத்தை 2025.10.22 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கீழே குறிப்பிடப்படுகின்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கின்ற பதவியின் பெயரை விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.

மார்ஷல்/பிரதம நிறைவேற்று அதிகாரி
மீயுயர் நீதிமன்றங்களின் கட்டடத் தொகுதி
த.பெ.இல:223,
கொழும்பு 12